# ஆதி மார்க்க னீதி மொழி

## January 2024

இதழ் 30 – ஜனவரி மாதம் 2024 வெளியீடு
© AMNA Trust, Chennai

ஆதியே துணை



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, கமழும் மெய் மணத்துடன் மலர்கிறது ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகையின் முப்பதாவது இதழ்.

3000 இதழ்களாக மலர்கின்ற வேளையிலும் சொல்கின்ற பொருள் ஒன்றே ஒன்றாகிய திருச்சிற்றம்பல பொருள்தான். இதன் சுபானுபவம் படித்தலும் கேட்டலும் அன்றி அனுபவிக்கக் கூடிய ஒன்றாகும். எக்காலத்தில் வந்த வேதமாயினும் அதனை படிப்பதும் கேட்பதுமாக இருந்த நிலையை மாற்றி, பழகுவதாக இருப்பதே மெய்க்கல்வி. இதன் சிறப்பை மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்கி அவர்கள் பழக்கித் தந்த முறைப்படி இம் மெய்வணக்கத்தை இன்று போதிப்பதே ஆதி மார்க்க னீதி அவை. சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள வேத வேதாந்தங்களும், உலகில் வந்த மற்ற வேதங்களுமே இதற்கு சாட்சி. வந்த வந்த வேதங்கள் யாவும் திருச்சிற்றம்பல பொருளாக விளங்கும் ஜீவனைக் குறித்தே சாட்சி கூறுகின்றன. செயல் நிரூபணையுடன் இதனை பெற்ற மக்கள், தங்களின் அனுபவங்களை வேத சாட்சியுடன் பகிர்வதே ஒவ்வொரு வாரமும் நடைபெறும் அவையின் நிகழ்வுகள்.

இதனை மக்கள் பார்த்து உணர்ந்து தேடி வர வேண்டும் என்ற நோக்கமே அன்றி வீண் பெருமைக்காக வருவதல்ல இந்த சஞ்சிகை. ஒவ்வொரு மனிதனுள் இருக்கும் பெருமை, சமாதானம் சமத்துவம் யாவும் உயிர் ஒட்டிய ரகசியமாக இருப்பதை அறிவிப்பதே இந்த அவையின் அத்தனை நிகழ்வுகளும்.

உம்முல் கிதாப் எனும் முதன்மை திருவசனத்தின் முதன்மைப் பொருளாகிய அலிப்-லாம்-மீம் எனும் மெய்யை மெய்யாகவே உணர்ந்த, தன் அனுபவத்தை திருக்குர்ஆன் மூலமாக யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிய தமிழில் நமது அங்கத்தினர் பானுமதி குமரேசன் பகிர்ந்து உள்ள விதம் மிகவும் அருமை. நமது அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி-தேவி அவர்களின் இல்லத்தில் 2024 ஆம் புது வருடத்தை முன்னிட்டு, குழந்தை யோகேஷின் சிலம்பக் கலையுடன் மலர்ந்த சிறப்பு அவையில், மின்னணு சஞ்சிகையை தொகுத்து வழங்கும் அரும் பணி, மற்றும் கைங்கர்யம் செய்த மக்கள் யாவர்க்கும் சிறப்பு சேர்க்கும் வண்ணம் ஆலய மரியாதை வழங்கப்பெற்றது. ஜீவன காரியமோ, விளம்பர நோக்கமோ இன்றி இந்த அவையின் நிகழ்வுகள் யாவும் ஜீவகாரியம் ஒன்றே ஒன்றினுக்கே.



Copyright © AMNA Trust, Chennai

**மேலும் மக்கள் யாவரும் வேத வாயிலாக உணர்ந்து சிந்தித்து செயலாற்றி பங்கு பெற வேண்டிய ஒன்று இதழ் தோறும் வரும் உற்றெழுத்து உணர்த்தல். அரும்பெரும் நிலைகள் யாவற்றையும் பொதிந்து வரும் இந்த சஞ்சிகையானது மேலும் மேலும் சிறக்க எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்குகிறேன். நன்றி.**

**நமஸ்காரம்.**

சாலை ரவி

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*னாம் பெற்றுள்ள இந்த அனித்திய அசுத்த தேகத்தோடு இறைவனுடைய பரிசுத்த சன்னிதிக்குச் செல்ல முடியாது. ஆகவே, இந்த அனித்திய உடல் இருக்கும் போதே இதனுள் இருக்கும் னித்திய முத்தி தேகத்தைப் பெறவேண்டும். இந்த அனித்திய தேகம் ஒரு கத்தியைக் கண்டால் பயப்படும். னெருப்பைக்கண்டு அஞ்சும். பசி, பிணி இவற்றால் துயருறும். ஆனால் கோடி சூரியப் பிரகாசமான ஒரு னித்தியதேகம், ஜெய வீரதேகம், ஆயுதம் னெருப்புத் தீண்டாத தேகம், பசி தாகம் னோய் எட்டித் தீண்டப்படாத தேகம் இந்நப் பீத்த உடலுக்குள் இருக்கிறது. ஈசனாகிய அந்நத் தேகத்தைக் கை போட வந்நவர்களே, அதிசோபன வரவாகிய அந்ந மகா சம்பத்தைப் பெற வந்நவர்களே எல்லோரும். ஆனால், அந்நத் திருஸ்த்தலத்திற்குக் கூட்டிப்போகிற அதிவல்லவராகிய ஒரு குருகொண்டல் கிடைக்காமலும், அவர் இருக்கும் எல்லையைத் தெரியாமலும், தெரிந்நாலும் னெருங்ஙி அவர் மன னோக்கிற்கு இணங்ஙி னடக்க இச்சையும் னேரமும் இல்லாமலும் எல்லோரும் வீணே போகின்றார்கள்.*

*மெய்ஞ்ஞானப் பாரவான்கள், தாங்ஙள் இயற்றியுள்ள கிரந்நங்ஙளை மக்கள் உரை செய்து கண்டு பிடித்துக் கொள்ளட்டும் என்று மறைத்துக் கூறும் வஞ்ஞகர்கள் அல்ல. மெய்யை னேருக்கு னேரே வைத்துதான் அவற்றில் பேசியுள்ளார்கள். ஆனால் மக்களின் அறிவிற்குமுன்னே ஒரு பாவத்திரை இருப்பதால் மெய் புலப்படவில்லை. ஒரு மெய்ஞ்ஞான சற்குரு பிரானின் அஞ்ஞன சலாகை கொண்டு அத்திரை கிழிக்கப்படும் வரை வேத உலகம், னூல் உலகம் விடியாது.*

*~ சாலை ஆண்டவர்கள்*


Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 டிசம்பர் மாத அவை நிகழ்வுகள் – 2024 ஜனவரி மாத வெளியீடு

**02-12-2023 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பூமியின் பாரந் நீர்க்கப் புதுப்புது னாமம் பூண்டு...** என்ற தெய்வத் தேடு கூடகம் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** எல்லோரும் ஓர் குலமாய் நிற்கும் நிலையே சமத்துவம் இலங்கும் இடம். சர்வ மதங்களின் னோக்கமாகிய மறலி கை தீண்டாமை எனும் செயலுடை சமரசமானது உயிரொட்டிய இரகசியமாக அவரவருள் விளங்குவதை அறிவிப்பவரே ஆரூரார். ஆதி மான்மியத்தின் சிறப்புகளை தொகுத்து ஆதி மார்க்க னீதி அவையின் அங்கமாகிய சித்ரா எழுதிய **திருவடி எனும் திருசிற் அம்பலம்** னூல் அனைவரும் படித்து பயன்பெற வேண்டிய ஒன்றாகும்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் – 153 :** இறை சமூகத்தில் கண்ணில்லா குழவியாக ஜட அணுவாக இருந்து தனு, கரண, புவன, போகம் எனும் நால்வகை சைதன்யத்தை தன் உடமைப் பொருளாகக் கொண்டு, காருண்ய நாட்டத்தால் பேரின்பமடைய இப்பூவுலகில் பிறந்து, குருஅருளால் சிவானுபவம் பெற்று ஞானம் அடைந்தவர்களே பழமைக்கு பழமையாகிய பண்டை புராதன சிவரஸ்தாவின் வழி கூடி வரும் தொண்டர்கள்.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான் : அத்தியாயம் 7 - அல் அஃராஃப்** வேதத்தின் சிகரமாகிய அலிபு – லாம் - மீம் எனும் தாலிக்கல் கிதாபின் மெய்ச்செயலை உணர்த்தி, தௌஹீது மக்காம் எனும் இறை இல்லத்தில் குடியேற்றி வைக்கவே நபிமார்கள் வந்தனர். ஐந்துவேளை தொழுகையும், ஆறுவகை நம்பிக்கையும் உண்டாக்கி ஒழுக்க னெறியில் நிலைபெறச் செய்து, திக்கீர் எனும் வணக்கம் மூலம் நபுசாகிய மனதை சிபத்தாகிய அறிவாக மாற்றி சொர்க்க வாசிகளாக வாழ வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் – ரோமன் : அதிகாரம் 12:16** அழியும் பொருளைப் பற்றி அறிந்தவன் புத்திமான் அல்ல, அழியாப் பொருளைக் கண்டு அதனுடன் இரண்டற கலந்தவனே ஏக சிந்தையுடைய அறிவு வடிவினன்.
**தெசலோனிக்கேயர் - 2 : 6** அறியாமையை சங்காரம் செய்து அறிவில் பிறக்கும் நாளே கர்த்தரின் நாளாகும். அறியாமை எனும் தூக்கத்தில் வீணாகும் நம் உடமைப் பொருளாகிய வயது வாழ்நாளானது, ஆசான் அருளும் தூங்காமல் தூங்கும் பிரம்மவித்தை செயல் மூலம் பாதுகாக்கப் பெற்று அறிவு பிரகாசிக்கிறது.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **ஸ்ரீமத் பகவத்கீதை - புருஷோத்தம யோகம்:** மனிதன் ஒரு தலைகீழ் மரம் என்ற தேவ ரகசியத்தை அறிந்தவர்களே புருஷோத்தமர். யாகத்தில் பயன்படும் இறை அம்சமுள்ள ஆல் மற்றும் அரச மரங்களின் சமித்து கட்டைகள் மீது நெய் ஊற்றி அதன் அவிர்பாகம் தேவர்களுக்கு படைக்கப்பெறும் ஐதீகத்தின் ரகசியம் பற்றி பகவத்கீதை அருள்கிறது. அசலான அகமிய மெய்குண்ட யாகம் புரியும் இரகசியத்தின் மூலம் உத்தம பொருளை அருளி, உள் தமரை உட்தாளிடும் பிரம்மவித்தை செயலை அருளும் உத்தம குருவே புருஷோத்தமர்.

*ஜீவசகோதரர் சங்கர்:* **குரு முறாதி :** நினைவிலூறிய நினைவாக தன் குருபெருமானிடம் வைக்கும் வேண்டுகோள் தியானமே குரு முறாதி. குருபிரான் அருளும் அன்பெனும் அருள் விளக்கும் அழியாத தௌஹீதும், காம முகத்தை கலங்கச் செய்து, புலன்வழி பற்றி ஓடும் பட்டசளத்தையும் மாற்றுகிறது. தனது பசித்த முகம் கண்டு கருணையுடன் ஊட்டிய ருசிமிக்க அருளமுதினை தான் அல்லத் தட்டியதையும், சிற்றறிவு கொண்டு பேசியது யாவற்றையும்



Copyright © AMNA Trust, Chennai

தனது குருபிரான் பொறுத்ததாகவும் ஆண்டவர்கள் அருளியுள்ள செயல் இன்று நம் அனைவருக்கும் பொருந்துவதாக உள்ளது. திருவருளை தினம் நோக்கும் தெய்வீக செயலின் மூலம் தீன்மணியை தரிசிக்கும் வரம் அருளிய ஐயனாம் னம் குருபெருமானின் திருவடி போற்றி பணிவோம் என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 03-12-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

**குருபிரான் அருளமுதம்**:

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி **அழுத்த முற்றிருந்த இருட்குலம் னெறிய...** என்ற **ஐவணத்தளிர்** ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

சாலை ஆண்டவர்கள் அருளிய **அந்த னாளில் அணைத்தெனையாட் கொண்டு...** என்ற பாடலைத் தொடர்ந்து, குருவானவர்களே தந்தை, தாய், குரு, பரப்பிரம்மம் எனும் நிலையில் இருந்து எதார்த்த மக்களை மெய் உணர்வில் நிலைக்கச் செய்கிறார்கள். **காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே** என திருஞானசம்பந்தர் அருளிய படி, அருவுருவாக வரும் குருபிரானின் னாத தொனியானது கந்தம் வீசும் கலாபமாக அதனை செவி மடுப்பவரின் கள்ளம் கருகி, உள்ளம் உருகி ஏறா னிலமிசை ஏற்றி வைக்கிறது.

*ஜீவசகோதரி சாந்தினி:*

> **பூதங்கள் ஐந்தும் பொறியவை ஐந்துளும்**
> **ஏதம் படஞ் செய்திருந்த புற நிலை**
> **ஓது மலங் குணமாகு மாதாரமோ டாதி**
> **அவத்தைக் கருவி தொண்ணூற்றாறே** **(திருமந்திரம்)**

தனது 96 தத்துவங்களும், அதனை உள்ளடக்கிய 36 தத்துவமும் இன்னதென அறியும் அறிவுடையவனே மனிதன். உடலின் நாடித்துடிப்பு சுவாச கலைகளை பிரதிபலிப்பதாக உள்ளது. **சரம் பார்ப்பான் பரம் பார்ப்பான்** என்ற வாக்கின் படி ஆசான் தயவால் சர ஓட்டத்தை தன்வசமாக மாற்றிக் கொள்வதே கலை. தமிழில் உள்ள உயிர்மெய் எழுத்துக்கள் 216, நமது ஒரு நாள் சுவாச அளவான 21600 என்பதை குறிப்பதாக உள்ளது. தன்னை அறிந்த பெரியோரின் தயவே காலனை வெல்லும் வழி. வாயுக்களின் தலைவனான பிராணனின் துணையுடன் இயங்கும் புலன் பொறிகளும், அதன் மூலமாக தசா புத்தியில் உண்டாகும் நீச்சம், உச்சத்திற்கு ஏற்ப எண்ணங்களும் அமைகின்றன. மந்திர சயனத் தேரோனான ஒரு குருவின் தயவு கிட்டினால் சிந்தை தெளிந்து புலன்கள், பொறி வசத்தில் சேரும். ஆசான் அருளால் ஆறு ஆதாரமும் அறுசுவையின் ரகசியமும் அறியும் போதே பஞ்ஞாட்சரமாகிய தமிழை அறிய முடியும். காற்றைப் பிடிக்கும் கணக்கை காலனை வெல்லும் குருவருளால் அறிந்தால் காலமற்ற னன்னிலத்தில் குடியேறி வாழலாம்.

*ஜீவசகோதரி இன்பலதா:* யாதில் யாது எனும் சுத்த நினைவாகிய இறைவனே அறிவாக ஜீவனாக கலிமாவாக சிந்தையற்ற தனித்தலைமைப் பதியாக விளங்குகிறது. யாது என்பது புற நினைவு. **ஓ'யாது'** படிக்க உணர்வு ஓங்கும். **யாதில் யாதாகி வரும் யானூரி யாமுகம்மது சாலிஹின் மேல் முறாதி** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆசானின் நினைவில் உதித்து வரும் வாய்மையே வேதம். குருவின் திரு **னா** ஆடும் போதே நம் புற நினைவு அகமாகத் திரும்புகிறது. அமானிதமான நினைவே சொர்க்கத்தின் இருப்பிடம். ஐம்புல நுகர்வுக்கு காரணமான நினைவெனும் பிரம்மமே அவரவரின் நாமமாக மூவுலகிலும் ஊடுருவி நிற்கும் நற்றாளாக உள்ளது. சுரோத்திரம் (செவி) மூலமாக உள் வாங்கும், ஆசானின் அருள்னாதமே யாதில் யாதாகிய நம் அக நினைவை அறிவு உருவாக மாற்றுகிறது.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி வாசுகி:* மனித தேகமெனும் ஆலயத்துள் வீற்றிருக்கும் ஜீவனாகிய இறைவனை அறியாதிருப்பது, கையில் வெண்ணை இருந்தாலும் நெய்க்கு அலைவது போலாகும். இதனையே **வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்** என திருமூலர் கூறுகிறார். **உள்ளும் புறம்புமாய் உடலுக்குள் நீ இருந்ததை எள்ளளவும் நான் அறியாது இருந்தேனே பூரணமே** என்கிறார் பட்டினத்தார். சுவர் இருந்தால் தான் சித்திரம் என்பது போல் உடலை கொண்டே ஆன்மாவை அறிய முடியும். தெய்வக் கண்ணாடியாக விளங்கும் குருபிரானின் சொல்லக விளக்காகிய ஜோதி மூலம் நம் அறியாமை அகற்றி சிறப்பெனும் செம்பொருளுடன் ஐக்கியமாகும் பொழுதே பிறப்பெனும் பேதமை நீங்கும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* தத்துவத்தின் மொத்த உருவான உடல் மூலம் தத்துவ நிலையை கடந்தவர்களே ஞானிகள். வேதங்கள் உணர்த்தும் நடுப்பொருளாகிய அறிவெனும் உறு பொருளை பேரறிவாகிய பெரியோர்களின் தயவால் தான் அறிய முடியும். மனம் அற்ற விழிப்பு நிலைக்கு நம்மை ஏற்றி வைப்பவர்களே விமலன். அவர்களே தங்களின் நினைவெனும் வல்லபத்தால் நம்மை தேர்ந்தெடுத்து மெய் வாழ்வில் குடியேற்றுகிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** பலன் கருதிச் செய்வதே கடமை. நோக்கமற்ற கடமை யாவும் வீணே. ஒரு பிரயோஜனம் கருதியே இறைவன் மனித தேகத்தை உண்டாக்கி இருக்கிறான். ஒருவன் தனது ஆறாவது அறிவை ஆசான் அருளால் அறியும் போதே மனிதனாகிறான். நித்திய மகிழ்ச்சியும் வாழ்வுமே, இறைவன் விதித்த கடமையை நிறைவேற்றும் மனிதனுக்கு கிடைக்கும் பலன். ஒருவனுக்கு மரண பயத்தின் மூலமே பக்தி உண்டாகிறது. உலகில் பயபக்தி என்பதே சொல் வழக்கு. தன்னை அறிந்த பெரியோர்களால் அழியாத பொருள் மீது நேசம் வைத்திட ஊட்டப் பெறுவதே பக்தி. அந்தத்தில் உதித்து அந்தத்தில் நிறைவுறும் **அவ்** இடமே காலனுக்கு அந்தமாகவும் சிவசந்திர வசந்தநிலை பொதிந்த இடமாகவும் உள்ளது. அழிவுடல் மேல் வைக்கும் அன்பே பந்தம். உடல் கடந்து நித்திய தேகத்தில் குடியேறி ஜீவன் மேல் வைக்கும் அன்பே நித்திய ஆனந்தம் தரும் என குருபிரான் அருளியதும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 09-12-2023 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருப்பாதம் பணிந்து **னேருரைதம் பிஸ்மில்லா ஹிர் ரஹுமானோடும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** மானிடர்களின் அறியாமை, பேதம், கடமை உணராமை இவையே போர் மற்றும் இயற்கைப் பேரிடர்களின் காரணம். வல்லிருள் மாய்த்து, அறியாமை எனும் இருளில் மறைந்துள்ள அறிவைத் தொட்டுக் காட்டி அறிவுருவாக்கும் ரகசியங்களை ஆதி மான்மியத்தில் சாலை ஆண்டவர்கள் பரிபாஷையாக அருளியுள்ளார்கள். மேலும் இறைவன், மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் குடியேறி இருக்கும் ரகசிய நிலைகள் பற்றியும் அருளியுள்ளார்கள். மனித உடலில் ஜீவன் குடியேறிய அடையாளமான மூச்சு, சப்தம் இவை வீணாகாமல், ஆறாவது அறிவு கொண்டு காத்து, தன்னையறியும் செயலே அடக்கம். பெரியோர்கள் தங்கள் அருள் னா மூலம் அசையாத அசலம் எனும் நிலைக்கு மக்களை ஆக்கும் செயலே அருணாசலமாகவும், அவர்கள் அருளால் மூன்றாவது கண் திறந்து ஜீவனைக் காண்பதே தரிசனையாகவும் உள்ளது.

**கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் 154 :** மனம் யௌவனம் ஆன பின்பே அறுகுநுனி வாசல் திறந்து பரமபதத்திற்கு ஏற முடியும். சுத்த சைதன்ய னாதர் சொல் ஒரு பொருளினால், மனதை மடக்கிப் பிடிக்கும் போதே அடக்கம் அமரருள் உய்க்கும் செயல் கைவரவாகிறது.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்தியவேதம் - ரோமர் : 12:2** *பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், தேவனுடைய நன்மை, பிரியம், பரிபூரண சித்தம், இன்னதென பகுத்தறிய, உங்கள் மனம் புதிதாகிறதால் மறு ரூபமாகுங்கள்.* மதிப்பு என்பது உணவுக்கு கூட போட முடியாத உப்பாகும்.



Copyright © AMNA Trust, Chennai January 2024



தீய குணமுள்ள மனம், கர்த்தராகிய குருவின் கருணையால் நன்மைக்குத் திரும்பி அறிவாகிறது. மனம் திரும்புதலே தேவரூபமான மறு ரூபமாகும்.

**தெசலோனிக்கேயர் -1:5 - 5:8** *நாம் இருளுக்கு உரியவர்களல்ல, பகலுக்கு உரியவர்களான நாம் தெளிவுடன், விசுவாசம் அன்பு எனும் மார்கவசமும், இரட்சிப்புக்கு உரிய நம்பிக்கை எனும் தலைச்சீராவும் தரிக்கக் கடவோம்.* ஜீவரட்சிப்பு தரும் குருபிரானின் பேரறிவுத் துணையே, மனத் தெளிவு தந்து **சீர்** எனும் அமானிதமான தலைச் சீராவாகவும், ஜீவசுவாசம் ஊதப் பெற்று நாம் ஜீவன்மேல் வைக்கும் விசுவாசமும் அன்புமே நம்மை சன்மார்க்க வசமாக ஆக்கும் மார்கவசமாகவும் உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** சர்வ மதங்கள், வேதங்கள், மூலமந்திரங்கள் உணர்த்தும் ஒரு பொருளை உணர்ந்த மக்களுக்கு இறைவன் ஒருவனே. சர்வ வேதங்களும் அருளும், முதலாகிய மெய்யறிவை ஒருவன் பெற்றால் சர்வமதத்திற்கும் உரியவனாகிறான்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **பகவத்கீதை - தெய்வாசுரசம்பத் விபாகயோகம் :** தேவன் அசுரன் என்பது குணங்களை வைத்தே அமைகிறது. ரஜோ தாமஸ குணமே ஈஸ்வர பட்டம் பெற்ற இராவணன் அசுரனாக மாறக் காரணம். குணங்களற்ற னிர்க்குண நிலையே தேவ குணமாகும். வேதவழி நடத்தும் கண்கண்ட தெய்வமான ஆசானின் தயவே, நம் உடல்பற்று, அளவிலா ஆசை, காம இச்சை இவற்றை வென்று தேவப்பதம் அடைவதற்கு உற்ற துணையாக விளங்குகிறது.

**குருபிரான் அருளமுதம்:** ரஜோ, தாமஸ குணம் அசுரத் தன்மைக்கும், சாத்வீக குணம் தேவத்தன்மைக்கும் உரிய வித்தாகும். சமாதானம், சமத்துவம், சமரசம் யாவும் ஜீவனுக்கான, உயிருக்கான ரகசியமாக உள்ளது. *108 பாதங்கள், 27 நட்சத்திரங்கள், 12 ராசிகள், 9 கிரகங்கள், ஏழு உலகங்கள்* யாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டு பஞ்ஞாட்சரமாக விளங்கும் ***ஞானத்தமிழே*** உயிரின் ரகசியமாகும். இதனை உணரும் மெய்யறிவைப் பெறுவதற்கான இடமாக விளங்குவதே **ஆதி மார்க்க னீதி அவை** என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

**10-12-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்**

**குருபிரான் அருளமுதம்:**

எழுதாத எழுத்தாகிய வேதமே நித்தியமான சிவமயம். சாலை ஆண்டவர்கள், தனிகை மணிப்பிரானுடன் தங்களது முதல் சந்திப்பில் உண்மையை உணர்ந்ததும், உயிர் நீத்த உடலில் மீண்டும் உயிர் வந்து அடைந்தன போன்றும், திசை தப்பி தவித்த கப்பலானது கரையை கண்ணுற்றன போன்றும் உணர்ந்தார்கள். ஆண்டவர்கள் அருளிய ஆதி மான்மியமே முதல் மறையாக உள்ளது. ஆதி மெய் உதய பூரண வேதாந்தத்தின் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு சரித்திரம் உண்டு. ஆண்டவர்களின் சுயநலமற்ற எண்ணமும், ஒழுக்கமுமே அவர்களின் சொந்த சொத்தாகிய ஞானத்தை இன்று நாமும் அனுபவிப்பதற்கு காரணமாக உள்ளது. வருங்கால சந்ததியினருக்கும் இந்த ஞானத்தை கொண்டு சேர்க்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாக உள்ளது. இறைவன் யாரையும் சோதிப்பதில்லை. நாம் எடுக்கும் தவறான முடிவுகளே நம் இன்னல்களுக்கு காரணம்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கௌதம்:* மனிதனின் **எண்சாண் உடலுக்கு சிரசே பிரதானம்** என அறிவிக்கும் அறிவே பிரதானமாக உள்ளது. நம் அறியாமையிலிருந்து மீட்டு அறிவுக்கு நம்மை மாற்றி வைக்கும் செயல் உடைய இரண்டெழுத்து மந்திரமே **குரு**. அவரவரின் நாமத்தின் அடையாளமே புள்ளியாக உள்ளது. தன்னை அறியாமல் நாம் வீணாக்கும் காலமே குற்றமாக உள்ளது. இறைவனின் செய்நன்றியான எட்டாப் பெருங்கடன், குருவருளால் நாம் ஏழாம் பிறப்பு எடுத்தால் தான் தீரும். தலையும் காலும் கொண்ட சிவமயப் பொருளான வேதத்தை அறிந்தவர்களே தேவர்கள். குருவருளால் நான்கு தேக ரகசியம் அறிந்தே மனம் பிரளாமல் அழிவிலா சூக்குமத்துள் அடங்க முடியும். காவிநிற நெருப்பே **சி** எனும் மந்திர எழுத்தாக உள்ளது.
*ஜீவசகோதரர் சசிகுமார்:* இறைவனை அறிய வைக்கும் குருவே மேலானவர். ஞானிகள் அருளும் கையின்றி பிடித்து காலின்றி நடக்கும் செயலும், சைவம் என்பதின் உன்னத நிலையும் குருவின் தயவால்தான் அறிய முடியும். என் சமூகம் உன் முன்னால் செல்லும் என்ற சிவஞான வழியில் வந்த முன்னோர்களின் வாக்கு இன்று செல்வாக்காக, செல்லும் வாக்காக, செயலாக ஆதி மார்க்க னீதி அவையில் விளங்குகிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* மெய் உணர்வு ஓங்கும் பொழுதே உணர்ச்சிகள் மறைகின்றன. பூஜ்யமாக இருக்கும் நம் அனைவரின் முன்பும் குருவாகிய எண் ஒன்று சேரும் போதே பயன். அலையும் மனதிலிருந்து நம்மைக் காக்கவே ஆண்டவர்கள் வேத வேதாந்தங்களை அருளியுள்ளார்கள். மெய் பொய்யும் பிரித்துக் காட்டும் வந்த வேதமாக விளங்கும் ஆசான் அருளால் அறிவை அறிவதே நித்திய வாழ்வுக்கான வழி. அங்கமதிடத்தில் ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறறிவாகிய உபதேசத்தை அருளும் மெய்க்குருவின் சொல் கேட்டு நடப்பதே ஞானத்திற்கான சுருக்கமான வழியாகும். ஸ்தோத்திரப்பாடலுடன் அவை நிறைவுற்றது.

**10-12-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **பரமனே வுருவெடுத்துப் பாரிடைக் குருவாய் வந்த...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:** அவரவரின் நாமமாக இருக்கும் திருச்சிற்றம்பலப் பொருளே இறைபொருளாக உள்ளது. முக்குணம் கடந்து நிர்க்குண அறிவு வடிவாகி, ஆண்டவர்கள் அருளியுள்ள சாகாகல்வியின் ரகசியமே ஆதி மான்மியம். கலைமகள் குடியிருக்கும் அமுதனா கொண்டு இறைவனின் திருவடி பெருமை அருளிய, ஆண்டவர்களின் திருவடிப்பெருமை பற்றி பேசும் நூலாகிய **திருவடி என்னும் திருச்சிற் அம்பலம்.** பரிசுத்த ஆவித் தெய்வத்தின் மகா மேன்மையை நாம் அனைவரும் அறிந்திட இந்நூல் ஏதுவான ஒன்றாகும்.

*ஜீவசகோதரி பொன்லட்சுமி:* ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, அழியாத மெய்யைப் பெற கடுமையான வைராக்கியத்துடன் மெய்ஆசான் சொல்வதைக் கேட்டு அதை செயலாக்கும் செயலையே **எம் னினைவிற்குப் பிரகாசமாக விளங்ங வேண்டும்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி அருணா:* குணங்களால் அமைவதே நரன், மனிதன், தேவன் என்ற நிலைகள். குரு அருளால் மனித பிறப்பு பெற்ற ஒருவனுக்கே தன்னை அறியும் திறன் உண்டு. அரூப வடிவான இறைவனை அறிய வைக்கும் ஆற்றல், ரூபத்தில் வரும் இறைவனின் சன்னதம் பெற்ற தீர்க்க தரிசியர்க்கே உண்டு. இறைவனால் மனிதனுக்கு தனிச்சீதனமாக அருளப்பெற்ற மனதின் உன்னதம் அறியாமல் பாவச் செயலுக்கே நாம் அதை பயன்படுத்துகிறோம். அலிபு-லாம்-மீம் எனும் அந்தக்கிதாபே சன்மார்க்க செயலுக்கான அட்சரமாக உள்ளது. மனிதனுள் விளங்கும் ஆறு ஆதார நிலைகளும் பூரகம், ரேசகம், கும்பகம் என்ற மூன்றினுள் இருப்பதாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஒரு மெய் குருபிரானிடம் முப்பொருள் தத்தம் செய்தே நம் மும்மலத்தை வெல்ல முடியும். பரிசுத்த ஆவியின் அருளால் மக்களுக்கு நேரான நேர்வழி அருளும் அவையாகத் திகழ்வதே ஆதி மார்க்க னீதி அவை.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம்:** நெடில் ஏழும் குறில் ஐந்தும் கொண்ட உயிர் எழுத்தின் உன்னதத்தை உணர்த்துவதே ஞானத்தமிழ். அமானிதத்தின் ரகசியமே ஆண்டவர்கள் அருளியுள்ள முன்னே துவர்க்கும் பின்னே இனிக்கும் பாஷை. எக்காலமும் பூமிக்கு வந்து கொண்டே இருக்கும் தீர்க்க தரிசியர்களின் தயவு கொண்டே உயிருடலமாக விளங்கும் உகாரப் பொருளுடன் சேர்ந்து மனிதனுள் இயங்கும் காலச் சக்கரம் நவகிரகம் இவற்றின் ரகசியத்தை உணர முடியும் என குருபிரான் அருளியதை தொடர்ந்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

**14-12-2023 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓதுமறை வேத னெறி உண்மையாய்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:** ஒவ்வொரு மதத்திலும் உள்ள மகா வாக்கியம் போல் மெய்வழியின் மகா வாக்கியமாக **ஆதியே துணை** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆதியே அந்தமாக ஜோதியாக ஜீவனாக சிவனாக உள்ளது.

**திரு மெய்ஞ்ஞான கொரல்: வாக்கியம் எண் 02 ன் தொடர்ச்சி:** ஜீவன் குடியேறிய அடையாளமான மூச்சும் சப்தமும் உள்ள குழந்தைக்கு சூட்டப்பெறும் தெய்வ நாமத்தின் ரகசியம் அறிந்தவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள். இறைவன் இருக்கும் இடமாகிய, சத்தம் பிறக்கும் இடமறிவதுவே தன்னையறியும் செயல். இதற்கே மனிதனுக்கு ஆறாவது அறிவு தரப்பெற்றுள்ளது. **தன்னையறிதலே இன்னில வாழ்வு** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான் - அத்தியாயம் 8 : அல்அன்ஃபால்.** இவ் அத்தியாயம் ஹிஜ்ரி 2-ம் ஆண்டில் நடைபெற்ற முதல் போரான பத்ரு போர் குறித்து விவரிக்கிறது. **வசனம் 07 – 08 :** அகமியத்தில் மனதுக்கும் அறிவுக்கும் நடக்கும் யுத்தத்தை குரு-சீடன் சம்பாஷணையாக, தேவ-அசுர யுத்தமாக, முன்வந்த வேதங்களும், தெய்வத் தேடு கூடகமாக சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். அறிவின் வெற்றியில் பேரின்ப நிலையும் நித்திய சொர்கமும் கிட்டுகிறது. **வசனம் - 41:** மனிதன் தன் அகங்காரம் விட்டு புலனை பொறி வசத்தில் சேர்த்து இறைவனடி சேரும் போது முத்தி அடைகிறான்.

**குருபிரான் அருளமுதம்: குரு முறாதி:** குருவே ஆசான் திருமேனியான வேதம். அமானிதத்தை அறிய வைக்க ஆண்டவர்கள் அருளிய அருளமுதமே குரு முறாதி. பெரியோர்கள் தங்கள் நாத துலக்கத்தின் மூலம் தன்னை நாடி வந்தவர்களின் அறிவைத் தெளிய வைத்து குருவின் திருமேனி காணவும், திருவார்த்தை கேட்கவும், திருநாமம் செப்பவும், திருவுரு சிந்திக்கவும் வைக்கிறார்கள். சுத்த பிரகாச மணியாகிய சுப்ரமணியை, தீன்மணியே திருமணியைத் தெளிமணியே, ஆன்மனீயே அம்மணியே தாய்மணியே என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். சாகாத்தலை-வேகாக்கால்-போகாப்புனல், அடி-முடி-னடு, உடல்-உயிர்-ஆன்மா, அலீபு-லாம்-மீம் என வேதமாகிய ஆரணத்துள் உறைந்துள்ள ஜீவனை அறிவதுவே சன்மார்க்க மரபு என்கின்றனர் சித்தர்கள். புராதனத்தை பற்றி அருளும் ஆசானே புராதனர் எனும் ஆசானின் அருள் மொழியுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

*குருவினால் உபதேசிக்கப்பெற்ற வழியினால் மனதைச் சுத்தப்படுத்தவேண்டும். ஆத்ம கோசரமான இவ்வெல்லாவற்றையும் அனித்தியமெனக் கண்டித்தல் வேண்டும்.* ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**16-12-2023 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **இணங்கிய சுபாவம் பார்த்து என்னிருதயத்தினுள்ளே…** என்ற ஸ்தோத்திர பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர் :*
குருபிரான் சொல்லுக்கு இசைந்த நன்மக்களுக்கு, உள்ளமாகிய மகா மகசூக்கான இருதயம் இன்னதென அருளப்பெற்று, ஆறுவகை நம்பிக்கை, ஐவகை தொழுகை எனும் பெருநிலையில் இணங்குவதற்கான உளவுகளும் அருளப்பெற்று, அகமிய வாழ்விற்குரிய மெய்வழி திறக்கப்பெறுகிறது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் : வாக்கியம் எண்- 155 :** ஆசானின் பரிசுத்த நினைவில் ஆகிக் கொண்ட யாவரும், ஒரே உள்ளத்துடன், ஒரே மாணாக்கராக வாழ்ந்தால் ஒரு கோடி பேரின் வல்லபம் பெற்றவர்களாகி, இத் தெய்வீக சபை வளர்வதற்கு உற்ற குலமானாக திகழலாம்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*
**பரிசுத்த வேதாகமம் - ரோமன்: 6 திருவசனம் - 5 & 12 :** உயிர்த்தெழுதல் என்பது அழியா தேகத்தை குறித்து அருளியதாகும். மனதுடன் வாழ்வது மரணமாகவும் மனதற்ற பரிசுத்தமே மரணமிலாப் பெருவாழ்வாகவும் உள்ளது. பரிசுத்த ஆவியினால் னரன் என்ற நிலையிலிருந்து மனு என்ற பதத்தில் உயிர்தெழுந்த ஒருவன், தாமரை இலை தண்ணீர் போல் பற்றற்று வாழ்ந்து தேவனாகிறான்.

*ஜீவசகோதரர் கோபிநாத் :*
**ஸ்ரீமத் பகவத் கீதை - சிரத்தாத்ரய விபாக யோகம்:** சிரத்தில் ஜீவித்து கொண்டிருக்கும் சத் சித் ஆனந்தமாகிய இறைபொருள் குணங்களால் கீழ்னோக்கி போகாமல் காக்கும் உபாயம் அருள்வதே இந்த யோகத்தின் சாரம்சம். **சாத்வீகி** - அறுசுவை உணவை அளவோடு உண்டு, யாகம், குரு வழிபாடு, யோகம், வேதம், ஆத்ம சிந்தனை உள்ளவனாகவும், **ராஜசி** - அதிக ரத்தம் ஊறும் உணவு உண்டு, தற்பெருமைக்காக இறை வழிபாடு செய்பவனாகவும், **தாமசி** - சுத்தமும் சுவையும் அற்ற உணவு உண்டு, துர் தேவதை, பூத கண வழிபாடு, மூட பழக்கமுடைய மிலேச்சனாகவும் இருப்பதாக பகவான் அருளியுள்ளார். **ஓம் தத் சத்** எனும் மகாமந்திர உபாசனையே முக்குணமற்ற நிர்குண பிரம்மத்தை அடைவதற்கான வழியாகும்.

**குருபிரான் அருளமுதம் :** சிரார்த்தம், திதி யாவும் இறந்தவர்கள் இன்னொரு தேகத்தில் வாழ்கிறார்கள் என உணர்த்தும் சடங்குகளே. குணம் கெடும் போதெலாம் மரணித்து கொண்டே இருக்கிறோம் என உணர்ந்து, சாகும் திறமாகிய சாஸ்திரத்தை அறிந்து சத் சித் ஆனந்தமாகிய வீடுபேறு அடையும் இரகசியத்தை அருள்வதே பகவத்கீதை.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:*
**திருஅருட்பா - அருட்பெருஞ்ஜோதி அகவல் :** அந்தம் எனும் முடிவே வாழ்வின் தொடக்கம். ஒரு விதையின் அழிவே விருட்சத்தின் ஆரம்பம். மனிதனுள் விளங்கும் ஆறறிவு, ஆறங்கம், ஆறாதாரம் இவற்றையே, ஆறு அந்தங்கள் என்கிறது வேதம். கலாந்தம், வேதாந்தம், போதாந்தம், நாதாந்தம், சித்தாந்தம், யோகாந்தம் என்ற ஆறும் கூர்ந்த ஒன்றில் வைத்து கோடியாய் பிரிக்கபெற்ற மெய்நிலைகளாகும். காலங்களுக்கு ஏற்ப வெவ்வேறு நாமத்தில் வரும் வேதங்களின் உட்பொருள் ஆதார உயிர்ப்பதிப்பு யாவும் இறைவனை அடைவது குறித்தே அருள்கின்றன.

**குருபிரான் அருளமுதம்:** பிரகாசத்துள் பிரகாசமாக, அணுவுக்கு அணுவாக ஆதிப்பிரானாக இலங்கும் இறைபொருளை உணர்ந்து வாழும் மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் என்ற அருளாசியுடன் ஆசான் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**17-12-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமாபதி வெங்கட்**

*ஜீவசகோதரர் கௌதம்:* மானிட வடிவம் தாங்கி சுகத்தையே நாடும் ஒவ்வொருவரும் தன்னையறியும் அசல் வாழ்வை அறியாமல் பொய்யான வாழ்வே வாழ்கின்றனர். இதனையே சாலை ஆண்டவர்களும் **அசலைக் காணீர் - விட்டுவிட்டீர்- நகல் வாழ்வு வாழும் உங்களை என்னுடைய அசல் உலகத்துக்கு அசல் வாழ்வுபெற அழைக்க வந்திருக்கிறேன்- இந்த அசலான வாழ்வை அல்லத்தட்டி – அலகை ஆகாதிருக்க அசலான வார்த்தை கூறும் - னான் யார் தெரியுமா- னான் தான் மெய்வழி னாதன்** என அருளியுள்ளார்கள்.

தன்னுள் இருக்கும் இறைவனை அறிந்து னித்திய சந்தோஷம் தரும் மெய்வாழ்வை ஒரு மெய்ஆசானின் வாய்மை கொண்டே உணர முடியும். சிற்றின்பம் விட்டு பேரின்ப வாழ்வு வாழ வழியருளும் மெய்குருபிரானின் தயவே அவர்களின் வாய்மையாகும். பெரியோர்கள் அருளும் பிரம்மவித்தை செயல் மூலமே நாம் மனம் அலைவற்று இறைவன் திருவடி சேர முடியும். தத்துவ வடிவமாக கோவில்களில் உள்ள இறையம்சம் அவரவரின் நாமமே. நித்திய மகிழ்ச்சி வாழ்வுக்கென மனிதனுக்கு இறைவன் தந்த சீதனமே ஆறாவது அறிவு. மாற்றத்திற்குரிய தோற்றமுள்ள அனித்திய உடல் பொய்யாகவும், அதனுள் இருக்கும் தோற்றமில்லா னித்திய உடல் மெய்யாகவும் உள்ளது. ஐம்புலன் வழியாக சர்வத்தையும் படைத்து இயக்கும் பிரம்மத்தை அறிவதே தன்னையறியும் ஞானம். ஆசான் அருளும் செவிச்செல்வமே நம்மை மறலி கை சிக்காமல் நம் மும்மலம் கருகச் செய்து முச்சுடர் தோன்றச் செய்கிறது. இழுக்காகிய இவ்வுடலுள் இருக்கும் உத்தமனைக் கண்டு வணங்குவதே மெய் வணக்கம். முக்கோணம் எனும் கொழுமுனையாம் கதிர்முனையை, மறைகளெலாம் புகழும் பஞ்ஞாட்சரத்தை சகல உயிர் ஜீவனிலும் ஆடும் அழியாத திருப்பாதத்தை அறிந்து குருவைப் போற்றி குடியோங்கி வாழும் வாழ்வே பெருவாழ்வு என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

**17-12-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **தரைதனில் னரராய்த் தோன்றி...** என்ற திருப்பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி ஜான்சிராணி:* அசைவற்ற குணக்குன்றான பிரம்மமாக வரும் குருவின் சொல்லுக்கு இசைகையில், அவரவருள் பரம்பொருளாக இருந்து ஐம்புல நுகர்வின் மூலமாக அனைத்தையும் அனுபவிக்கும் ஜீவனை அறிய வைக்கிறார்கள். சுயம் பிரகாசமாகிய பிரம்மம், அரூப வடிவில் தோற்றமும் முடிவும் அற்ற அனாதிப் பொருளாக, பூமியின் தலைவாக, அசைவற்று நீக்கமற எங்கும் நிறைந்து, சர்வ மூலமந்திரங்களையும் உள்ளடக்கி, சர்வத்தையும் படைத்து, எழுதாத எழுத்தாக விளங்கும் இதன் மேன்மையை சாலை ஆண்டவர்கள் ஆதி மான்மியத்தில் அருளியுள்ளார்கள். இதனை ஒரு மெய்ஆசான் அருளால் இதயப் பிரகாசமாக காணும் செயலே பிரம்மவித்தை.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா:* அழியா பொருளை கற்பிக்கும் அழியாச் செல்வமாகிய கல்வியே சாகாக்கல்வி. தீய எண்ணம் உள்ளவனை நல் எண்ணம் உள்ளவனாக மாற்றுபவரே நவக்கிரக கோளரிவாளர். ஆர்வ சித்தம் உள்ளவனுக்கே மெய்க்கல்வியும், ஒழுக்கமும் கைவரவாகும். நற்றாளை அறிவிக்கும் மெய்க்கல்வியே மதிப்பிற்குரியது. அழியாச் செல்வமாகிய மெய்க்கல்வியே அறிவு வடிவாக உள்ளது.

*ஜீவசகோதரி மகாலட்சுமி:* மனுவின் சுத்த இருதயத்தில் இருக்கும் நிர்குணம், முக்குணமாகி, சாத்வீக குணம் நன்மையும், ரஜோ, தாமச குணம் தீமையும் தருகிறது. ஆறறிவு பெற்று ஐயறிவு நுகர்ச்சியில் நரனாக வாழும் மனிதன் மும்மல மாயையால் சமரசமின்றி பேதமையுற்று



Copyright © AMNA Trust, Chennai

பிறவிச்சுழலில் சிக்குகிறான். ஒரு மெய்ஆசான் அருளால் தான் மும்மலத்தை தீர்க்க முடியும். மனிதனைப் பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளியாகிய ஜீவன் உணர்ச்சியில் இருந்து மெய் உணர்வுக்கு மாறும் போதே சிவனாகி பிறவாமை பெறுகிறது.

*ஜீவசகோதரி ஸ்ரீலட்சுமி:* தன்னை அறிந்த ஒரு தவசீலரின் இரக்கமே, நம் அறியாமை அகற்றி, அறிவை அறிய வைத்து மனுவாக்குகிறது. வித்துக்குள் மறைந்துள்ள விருட்சம் போல் மனதினுள் சர்வ வினைகளும் உள்ளன. மாயத்திரைகள் மறைத்திருக்கும் இறைவனின் இருப்பிடமாகிய இருதயம் எனும் மூன்றாவது கண்ணாகிய அறிவை அறிவாகார ஆசான் அருளால் தான் அறிய முடியும். நம் நினைவெனும் ஆகாயத்தில் உள்ள நவகிரகங்களும், நவக்கிரக கோளரிவாளராகிய ஆசான் அனுக்கிரகத்தால் நிக்கிரகம் ஆகின்றன.

*ஜீவசகோதரி மாலைபுஷ்பம்:* அறிவை அறியாமல் அறியாமையில் வாழும் நரன் என்பவனை குருபிரான் தன் தயவால் அறிவு வடிவாக்கி மனுவாக மாற்றுகிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அகத்தின் அழகு தெரிவது முகமாகிய அறிவில் தான். ஜீவன் ஆகிய சிவமே அன்பாக உள்ளது. அழியாப் பொருளாகிய உயிரை நம்பியே அழிவுடல் வந்தது. அழியா பொருளாகிய தோற்றமில்லா இறைவனை சிக்கெனப் பிடித்ததாக மணிவாசகப்பிரான் அருள்வது தன் உள்ளமாகிய கையால் பிடித்ததேயாகும். தோற்றத்தில் உள்ளதைப் படிப்பது பொய்க் கல்வியாகவும், தோற்றமற்ற ஒன்றைப் பழகுவது மெய்க் கல்வியாகவும் உள்ளது. குருபிரான் தங்களின் அனுபவத்தை நம் தலையில் ஏற்றி வைக்கும் பிரம்மவித்தை செயலை அருள் பாலிக்கும் எல்லையே குருஷேத்திரம். மனுவுக்கென இறைவன் தனிச் சீதனமாக வழங்கிய அமானிதப் பொருளை ஆசான் அருளால் அறிவதே தன்னை அறிதல். சதா சர்வ காலமும் நம்முடன் இருந்து நம்மை கவனிக்கும் இறை பொருளை அறிந்தால் ஒழுக்கம் என்பது தானே வரும். மார்கழி எனும் தனமதி மாதத்தின் பொருளாகிய செல்வம் எனும் அறிவைக் குறித்தே கிருஷ்ண பரமாத்மா மாதங்களில் நான் மார்கழி என கூறுகிறார். மனதற்ற பரிசுத்தமே பிறவாமை. அறியாமைக்குள் இருக்கும் அறிவை அறியவைக்கும் அறிவு வடிவாக வரும் ஆசான் சொல்லுக்கு இசையும் போதே தன்னை அறியும் அறிவை அறிய முடியும், என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

**21-12-2023 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்**

மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அழியாப்பதி குடியேறிய...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* அழியாப்பதியில் குடியேறி குருபிரானாக வரும் நாயகம், தன்னை நாடிவரும் மக்களின் அறியாமை அகற்றி அழியாமை இன்னதென அறிவிக்கிறார்கள். அவர்கள் அருளும் உபாயமே நமது அறிவில் தெளிவு உண்டாக்கி காலனை அஞ்சி ஓடச் செய்கிறது. பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஆசீர்பாதத்தால் செயலுள்ள சாகாக்கல்வியை கற்பிக்கும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கமாகிக் கொள்ள எதார்த்த நன் மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப் பிறப்பில் பிறந்து ஆகிக் கொள்ளலாம்.

**குருபிரான் அருளமுதம்:**
**திருமெய்ஞ்ஞான கொரல் வாக்கியம் எண்: 2 – தொடர்ச்சி :** தெய்வம் எதற்கு வேண்டும்? பிரார்த்தனை காணிக்கை இதனை எங்கு செலுத்துவது? கடவுள் யார் கர்த்தர் யார்? என்ற கேள்விகளுக்கும், கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும் என்ற மகா வாக்கியத்தின் படி, எதைக் கேட்பது? எங்கு தட்டுவது? என்ன தேடுவது? என்ற கேள்விகளுக்கு ஒரு மெய்க்குருபிரான் தயவால் மனுவாக மறுபிறப்புப் பெறுகையில் தான் விடை காண முடியும். வினை தீர்க்க வல்ல குருவின் அருளால்தான் வினை தீர்த்து பிறவாமை பெறமுடியும்.



Copyright © AMNA Trust, Chennai

**குருமுறாதி:** இராஜாங்கமான பொருளில் தொடங்கி, அஷ்டாங்க யோகத்தின் அத்தனை நிலைகளும் கொண்டதே ஆண்டவர்கள் அருளியுள்ள கண்ணான நூலான **குருமுறாதி.** அன்பெனும் விசேஷத்தால் அருளப்பெறும் அகரமுதல் தன்னிடம் வாங்குவதற்கு ஆண்மையர் அனைவரும் வாங்க வாங்கோ என ஆண்டவர்கள் அழைக்கிறார்கள். கண்ட சூக்குமம் தாண்டி தூலந்தன்னில் காஷாயம் அணிவதற்கு அருகதை உள்ளவனாக ஒருவனை ஆக்கும் செயல் கொண்டவர்களே மெய்க்குருபிரான். திருவெனும் அட்சரத்தைக் கொண்டவர்களே திருவெனும் இமையா நாடு உடையவர்கள். தோற்றமும் முடிவும் தன்னிடத்தில் கொண்ட காலத்தை கடந்த பொருளாக விளங்குவதே சாலை வளநாடு. வேதமே பாதம் பாதமே வேதம் என உணர்த்தும் குருவே பாதம். ஆசான் அருளால் மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் வீற்றிருக்கும் இறைவனை அறிவதே மதி. குருவைப் பெறாத ஒருவனுக்கு அதுவே விட்ட குறையான விதியாக உள்ளது. பஞ்ஞாட்சரமாக விளங்கும் ஐந்தெழுத்து மந்திரம், அறியாதவர்க்கு எழுத்தாகவும் அறிந்தவர்க்கு வாழ்க்கையாகவும் உள்ளது. **தேவராய் பிறக்க தேரைந்து மந்நிரம்** என ஆண்டவர்கள் அருளியுள்ளபடி மந்திரத்தில் வாசம் செய்யும் மந்திரவாசனை கண்டு தரிசித்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் என்ற குருபிரானின் அருளாசியுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது

**23-12-2023 ~ சனிக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

சாலை ஆண்டவர்கள் அருளிய செயலுடைச் சமரசம் திருப்பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* மனம் அமைதி பெறுவதே சாந்தி எனும் சலாமத் ஆகும். **சமரச வேத னாதாவே ஜாதிகளின் கர்த்தாவே** என்பது மெய்வழியின் வணக்க நடை முறையாகும். குருநாதரின் அனுபோகத்தால் மனம் அலைவற்று ஐம்புலன்கள் ஒடுங்கி துஞ்ஞாமல் துஞ்ஞும்போதே சமரசம் கிட்டும். **ஆதியொளி தோற்றுவது யாருக்கென்றால் அதிகமாம் புண்ணியர்க்கு எய்தும் பாரு** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆதி ஒளிக்குள் தான் சமரசம் எனும் சிவானுபவம் உள்ளது. மேலாம் பதமான நாலாம் பதமாகிய சாயுச்சியம் எனும் நல்ல கதியினை நிலவுலகிலுள்ள எல்லோரும் பெற வேண்டும் என்பதே பெரியோர்களின் இச்சை. தேகம் உள்ளவரை புலன்வழி சென்று அறியாமை எனும் இருளில் மூழ்கும் நம்மை பெரியோர்களின் வாய்மையே அதிலிருந்து மீட்கிறது. தேசிகர் அருளும் சின்முத்திரை ஒன்றே நம் மரணபயம் தீர்க்கும் வல்லபம் கொண்டது. நூறொளி, அருட்பெருஞ்ஜோதி, கோடிசூரிய பிரகாசம்யாவும் அவரவரின் நாமத்திற்குரிய மெய் உணர்வாக உள்ளது. மனதின் மூலம் உண்டாகும் தசாபுத்தியே நம் பிறவிக்குக் காரணம். குருவருளால் ஜீவனை கண்டு வணங்குவதே ஜென்ம சாபல்யம் பெறும் வழி. **சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்** எனும் சிவபுராணம் பாடலின் பொருள் நம் ஜீவனைக் குறிப்பதாக உள்ளது. மனதற்ற பரிசுத்தமே நம் பாவம் தீர்க்கும் உபாயம். தேகம் என்ற எண்ணத்தை துறப்பதே துறவறம். அசையாத சைவத் திருமேனியே பரம்பொருளாக உள்ளது. இதனையே ஏகாந்தம் இனிது என்கிறார் ஔவை பிராட்டியார் என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

*தோற்றுகின்ற யாவும் ஞேயமென்றும், அரூபமாகிய ஜீவன் ஞானமென்றும் சொல்லப்படுகின்றது. (ஆதலால்) ஞான ஞேயங்களைச் சமமாக்கவேண்டும். இதைவிட வேறு இரண்டாவது மார்க்கமில்லை.* ~ ***குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**24-12-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சென்னை**
**ஜீவசகோதரர் சரவண குமரனின் முதலாவது ஆண்டு பூர்த்தி விழா**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அரண்டிடும டத்தாருப தேசமதழிம் பெனக்கண் டக்கினியி லிட்டெடுத்தபின்...** என்ற ஞானமுறையீடு பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** பிரம்மப்பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் நாங்கள் சேர்ந்து ஆகி இருக்கிறோம் என்பது அவரவரும் தன்னுள் தான் யார் என்பதை அறிந்து சேர்வதாகும். துளசி விளைந்திருக்கும் இடமாகிய பிருந்தாவனமும், அறுபடை வீடும், ஐந்தெழுத்து மந்திரமும், தன் நாமம் என உணர்ந்து மானிடச்சட்டையை துறக்க வேண்டிய காலத்தை உணர்ந்து அக்கடத்துள் ஆகி, தன் ஜீவசுதந்திரத்தை கைப்பற்றி, அறிவு வடிவு ஆனவனே சரவணகுமரன். தச்சன் செய்யாத தச்சில்லா வண்டியாகிய நம் தேகத்தில் ஏற்றப் பெற்ற திருச்சிற்றம்பலப் பொருளைக் காணும் கண் பெற்றவனே அடக்கம் பெற்றவன். தம் பரமாக விளங்கும் **சி** எனும் ஜீவனாகிய சிதம்பரமாக முக்குணமாக விளங்குவதைக் காண தமிழ் தான் வேண்டும் என்பதனையும் மரணத்தின் கூர் இன்னதெனவும் அறிந்தவர்களே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள்.



*ஜீவசகோதரர் தியாகராஜன்:* ஆசானின் நினைவகத்தில் வாசம் செய்து, அவர்களின் சொல்லை செயலாக்கி, அனித்திய உடல் நீக்கி நித்திய உடலில் குடியேறி அறிவெனும் தீபமாய் அன்பர்கள் உள்ளத்தில் அகலாது நிலைத்து அனைவரின் அன்புக்கும் பாத்திரமானவன் சரவணகுமரன்.



*ஜீவசகோதரர் பழனிவேல்:* மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நான்கு நிலைகளிலும் இருக்கும் மெய்க்குருவின் அருள் தூய உள்ளம் கொண்ட நன்மனத்தினருக்கே வாய்க்கும். உலகப்பற்று அற்றுப் போகும் போது மெய்ஞானம் பெறுவது எளிது என்பதை உணர்ந்து ஆசான் சொல் பிறழாது நின்று இக வாழ்வை விட்டு பரலோக வாழ்வில் குடியேறிய பெருமைக்கு உரியவன் எனது மகன் சரவணகுமரன்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* அண்ணன், தந்தை என்ற நிலையில் இருந்து இக பர காரியங்களில் எனக்கு வழிகாட்டி, தான் பிரதானமாக எண்ணிய பணத்தை, பொய் என குருவருளால் அறிந்து, மெய்யின் பால் தன் எண்ணம், சொல், செயல் மூன்றையும் திருப்பி நல்ல கதி நிலை பெற்றவன் எனது அண்ணன் சரவணகுமரன்.

*ஜீவசகோதரர் தாமோதரன்:* உதயமாகி வரும் சரவண நந்தவனத்திற்கு ஒரு கருவியாக இருந்து, கூரான குருவருளால் தனது கூரான அறிவை அறிந்து அறிவு வடிவாகி அமரத்துவம் பெற்றவன் சரவணகுமரன்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் வளவன்*: நண்பன் என்ற சொல்லுக்கு இலக்கணமாகி, தான் கொண்ட பணியில் விடா முயற்சியுடனும் தன் நிலை போல் என் நிலையும் உயரச் செய்து, மரணத்தைக் கண்டு அஞ்சாமல் மனதை வென்று பிஞ்ஞகன் தன் நோக்கால் பிறவாமை பெற்றவர் என் நண்பர் சரவணகுமரன்.

*ஜீவசகோதரர் சங்கர்:* **ஈசாவென்றே மறைபோற்ற எய்தும் பரமபத னெஞ்ஞே ...** இக்கடத்தை நீக்கி அக்கடத்துள்ளாகும் பிறவாமை வேண்டி, அறவாழி அந்தணன் தாள் சேர்ந்து அறவழி நின்று புறவழி சென்ற தன் சரத்தை பரவெளியில் சேர்த்து மரணத்தை வென்று அமரனானவன் சரவணகுமரன்.

**குருபிரான் அருளமுதம்: எல்லோருமே இந்த இன்பம் அறிந்நிட என்றனிட னாட்டம்...** செயலுள்ள இவ் வாசகத்திற்கு உரியவர்களாக நாம் அனைவரும் ஆகிக்கொள்ள எல்லாம் வல்ல பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஆசீர்பாதத்தை வேண்டி வணங்குகிறேன். ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**28-12-2023 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் அருளிய எமபடரடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் 2 ன் தொடர்ச்சியுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
பரம்பொருள் அருளிய இத் திருவாக்கியத்தின் சூட்சுமம் அறிய மதி அதிகம் வேண்டும். **மேலசுழி மூலவட்டம் காலூன்றி மூலனாடி யூடமுத்த மூச்சாடா** எனும் தவநிலை ரகசியம் ஆசான் அருளால் கைவரப் பெற்றவர்களின் நேசமுகம் ஒன்றுக்கே எமன் அஞ்ஞி விலகுவான். செயலுடைச் சமரசம் இன்னதென உணர்ந்த மக்களே அவரவர் நாமத்திற்குரிய பொருள் இறைவன் என்பதை அறிவர். ஒருவன் சிவனாகவோ எமனாகவோ, ஆவதற்கான ஜீவ சுயராஜ்யத்தை இறைவன் கொடுத்துள்ளான். சகல உற்பனத்திற்கும் காரணமான வித்தில்லா வித்தின் ரகசியம் கற்பனை கடந்த சஞ்ஜீவியாக உள்ளது. காதாகிய அறிவை முதலாக வைத்தே இத்திருச்சபை உண்டாக்கப் பெற்றுள்ளது. புலனுக்கு ஆளாகாமல் காக்கும் தெய்வப் பூ மலரில் சரண் அடைவதே நித்திய மகிழ்ச்சிக்கான வழியாகும்.

**குரு முறாதி :** எமன் எழுதும் குற்றெழுத்தும் சிவன் எழுதும் உற்றெழுத்தும் மனம் எனும் மாளிகையில் தான் உள்ளது. இதனையே கணியன் பூங்குன்றனார், **தீதும் நன்றும் பிறர் தர வாரா** என்கிறார். ஓதாமல் ஓதும் மெய் வணக்கமே குற்றெழுத்தை உற்றெழுத்தாக மாற்றும் சாதனம். எழுதாத எழுத்தாக இருக்கும் பிறந்த ஒரு குழந்தை தன் தாய் கற்பிக்கும் எப்பாஷை ஆகிலும் அதில் பழகித் தேர்கிறது. சர்வ பாஷைகளும் **அ உ ம** என்ற மூன்று அட்சரத்துள் தான் உள்ளன. **நான்** என்பது சகல உயிர்களில் இருந்தாலும் அதனை அறியும் அறிவு மனிதன் ஒருவனுக்கே சாத்தியம். சன்மார்க்கத்தின் உச்சபட்சமான **மூமூமூ** எனும் அநாகத ரகசியத்தை 12 பாடல்களில் 12 ராசி நிலைகளில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மந்திர கலையான சேமநிதி, சாகாத்தலை-வேகாக்கால் மூலமாக போகாப்புனலாகி வருகின்றது. சேம நிதியை வீணாக்கும் சத்துருவாக மனமும், சேமிக்கும் மித்துருவாக அறிவும் உள்ளது. பூரகம், ரேசகம், கும்பகம் எனும் சுவாச கதியிலுள்ள நல்லகதி மூலமே கங்குல் பகலற்ற சுயம் பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூபத்தை அறிய இயலும். மேல் நோக்கமான மெய்வழி குருமார் சொல் ஒன்றே நம் மூவினைகளும் தீர்த்து பிறவாமை பெறச் செய்யும் மாமருந்தாகும். ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**31-12-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சென்னை**
**புதிய ஆண்டு சிறப்பு அவை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**இடம்:** *ஜீவதம்பதியர் கிருஷ்ணமூர்த்தி-தேவி இல்லம், பாக்கம், சென்னை*

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** 12 மாதங்கள், 12 ராசிகள் என 12க்குள் நம் வாழ்க்கை உள்ளது. ஜீவனின் ரகசியம் 9 கிரகங்கள் 12 ராசிகளுள் உள்ளது. இறைவனின் ரகசிய பெட்டகமாகிய மனிதனின் தென்பாகமாகிய தலைதான் என்னாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவனின் இருப்பிடம். அவரவருள் இருக்கும் **நான்** எனும் பொருளான நான்முகனே நால்வேத ரகசியமாகும். *குருவருளால் தன்னை அறிந்து புத் எனும் நரகத்திலிருந்து மாறிக் கொள்ளும் நாளே புதிய ஆண்டாகும்.*




*ஜீவசகோதரர் சங்கர்:* ஒவ்வொரு நொடியும் சுவாசத்தின் மூலமாக நமது வயது வாழ்நாளை வீணாக்கி விட்டு புதிய வருடம் பிறக்கிறது என மகிழ்கிறோம். அதோகதியாக வீணாகும் சுவாசம் நற்கதியாக மாறிட ஒரு மெய்க்குருவின் தயவை நாடி அவர்களின் சொற்படி கோணாது முக்கோணம் போட்டு அதன் மேல் ஆசனம் போட்டிருந்து கொண்டு நாணாமல் தாரக மந்திரத்தை ஓதினால் வரும் நாளெலாம் நல நாளாகும்.

**குருபிரான் அருளமுதம்:**
புலன் வழி பற்றி வீணாகும் வாழ்நாள் குருபிரான் அருளும் உபாயத்தால் இனி வீணாகாது நல நாளாகிறது. சுயம் பிரகாச ஐந்தெழுத்து மந்திரத்தை தன் உள்ளத்தில் கண்டவர்களே அருட்ஜோதி வடிவான தேவர்கள் என்பது திருமறைத் தீர்ப்பு. தோற்றத்திற்கு வரும் பொய்ப்பொருளை அகத்தில் இருந்து காட்டும் தோற்றமற்ற மெய்ப்பொருளே அவரவரின் நாமமாக உள்ளது. **எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.** மெய்ப்பொருளை அடைய ஆண்டவர்கள் கொண்டுவந்த நிஜ நிதி லாபகர வசந்த காலம் இன்று நமக்கும் வாய்த்தது. கணுமுற்றி னின்ற கரும்புள்ளே இருந்த வெளிச்சப் பொருளே நமக்குத் துணை என்பதை ஆண்டவர்கள் வேதாந்தத்தில் மகாவாக்கியமாக **ஆதியே துணை** என அருளியுள்ளார்கள். ஆதியைப் பிரகாசமாக அறிந்தவனே புண்ணியன்.

குருவாகிய சிவனே நம் எமபயமெனும் மாரணத்தை ஆரணமாக மாற்றி ஆபரணமாக நமக்கு சூட்டுகிறார்கள். சிவலிங்கத்தை கட்டிப்பிடித்த மார்க்கண்டேயரின் செயல் குருவருளால் அவரவரும் தன்னிடம் அனுபவத்தில் அறிவதாக உள்ளது. கூரான குருவருளின் துணையுடன் நமது அறிவை கூர் தீட்டி அடக்கத்தை மடக்கிப் பிடித்து சாவருமுன் சாகப்பழகுவதே பிறவாநெறி என குருபிரான் அருளியதை தொடர்ந்து, அங்கத்தினர் சேர்க்கையும், கைங்கர்யம் மற்றும் திருப்பணி செய்த அவை மக்களுக்கு நினைவுப் பரிசும் வழங்கப் பெற்று, ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**10-12-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **சோதி எழுந்ந என் னாதர்...** என்ற ஆனந்தக் களிப்பு பாடலுடன் அவை மலர்ந்தது. **சாலைவா ழனந்நர்க் கெல்லாம் தனித்தலைப் பதியா யோங்ஙி...** என்ற **திருப்பஞ்ஞணை எழுச்சி** காப்பு செய்யுள் வரிகள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**17-12-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அளவிலா வெகு காலம் இப்பூமியில்...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருகொண்டல் அவர்களின் வழி காட்டலின் படி **திருப்பஞ்ஞணை எழுச்சி** பாடல் வரிகள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**குரு வா ஆழ்க !   குருவே துணை !!**

*குருசன்னிதியில் னீங்களென்று குறித்துப் பேசுபவனும், "ஹூம்" போட்டுப் பதில் சொல்லுகிறவனும், வாதிப்பவனும், னீரில்லாத இடத்தில் பிரம்ம ராக்ஷசனாய்ப் பிறக்கிறான். குருசன்னிதியில் ஒருபோதும் அத்வைத பாவனை செய்யலாகாது.* ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## ஆதி மார்க்க னீதி அவையின் 2023 – டிசம்பர் மாத னிகழ்வுகள்

**24-12-2023: ஞாயிற்றுக்கிழமை:** ஜீவசகோதரர் சரவணகுமரன் ஜீவப் பிரயாணமான முதலாம் ஆண்டு பூர்த்தி சென்னையில் குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திருமுன்பாக சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பெற்றது.













Copyright © AMNA Trust, Chennai

**31-12-2023: ஞாயிற்றுக்கிழமை:** 2024ஆம் புது வருட தினத்தை முன்னிட்டு, ஜீவதம்பதியர் கிருஷ்ணமூர்த்தி-தேவி அவர்களின் இல்லத்தில் குருபிரான் எழுந்தருளி அருளமுத வர்ஷிப்பை அருளினார்கள். மேலும் மின்னணு சஞ்ஞிகையை தொகுத்து வழங்கும் ஜீவப்பிறவியர்களுக்கான விருதுகள், கைங்கர்யதாரர்களுக்கான நினைவுப் பரிசுகள் வழங்கியும், புதிய அங்கத்தினர்கள் சேர்க்கையுடனும் அவை சிறப்புடன் நிறைவுற்றது. அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பெற்றது.














Copyright © AMNA Trust, Chennai

## உற்றெழுத்து உணர்த்தல் – 6

உற்றெழுத்து உணர்ந்த மக்கள் அதனை வரும் **பிப்ரவரி 10**ம் தேதிக்குள் write2amnatrust@gmail.com முகவரிக்கு, அல்லது Whatsapp எண் +917305972399 அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். சரியான உற்றெழுத்தை அனுப்பிய முதல் 10 அன்பர்களின் பெயர்கள் புரந்தரர் பொன்னேடாக மின்னி வரும் மின்னணு சஞ்ஞிகையில் மின்னுவது திண்ணம்.



**இடமிருந்து வலம்:**

1) எமனின் வாகனம்
4) இலக்கு
5) அசையாமல் இருப்பது
6) திருப்பாதம் இலங்கும் மலை
7) அந்தகரணத்துள் ஒன்று
8) சீறும் சரம்
10) பயம்
11) 'தி' சேர்ந்தால் வேண்டுகோள் தியானம்
12) காக்கும் கடவுள் பெயரின் பாதி
13) சிவனின் நாமம்
14) இதில் இரண்டை கட்டிக்கொண்டால் வீடாகாது
21) பல மலர்களின் தொகுப்பு
25) தேகமெனும் கூட்டில் நமது நிலை
26) அனாதி

**வலமிருந்து இடம்:**

2) கூவும் பறவை
3) அரசர்கள் சூடுவது
18) நள்ளிரவு
20) செல்வத்தின் பெயர்
24) மவுன மாமணியாக இருப்பது



Copyright © AMNA Trust, Chennai 

**மேலிருந்து கீழ்:**

1) சிவனின் வாகனம்
2) இது தழைத்ததன் பெயர் வாழ்வு
3) விடுதலை
7) போகரின் சீடர்களுள் ஒருவரின் பெயரிலுள்ள தேசிய விலங்கு
9) பித்தில்லா பறவை
10) மலை
13) மகளிரின் நாற்குணத்துள் ஒன்று
14) 12 ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் மேளா
16) கேசரி
19) இந் நதியில் குளித்த பின்பு ஐயப்பனை தரிசிக்க செல்வர்
21) நாழிகையின் பெயர்
23) நாழிகை அறுபது கொண்டது

**கீழிருந்து மேல்:**

4) இருட்டு என்ற சொல்லுக்கு முன் இதையும் சேர்த்து சொல்வதுண்டு.
5) தாயை குறிக்கும் சொல்
6) அறிவு
12) பயத்தின் மூலம் வருவது
15) துளையின் பெயர்
17) இதுவும் ஐம்பூதங்களுள் ஒன்று
18) மிகுதி, பெருமை
22) மகா வாக்கியங்களில் ஒன்றின் பாதி
24) ரணத்தின் அடையாளம்

குறிப்பு: உற்றெழுத்து அனுப்பும் வழிமுறை: கட்டம் வரைந்து அனுப்பாமல், "இடமிருந்து வலம்.... கீழிருந்து மேல்" என்ற தலைப்புடன் அதற்குரிய எண்ணும் பதிலுமே போதுமானது.

## டிசம்பர் மாதம் 2023 வெளியான உற்றெழுத்து உணர்த்தல் – 5: விடை

**இடமிருந்து வலம்:**

1) சந்தனம் 3) சர்வம் 9) விதி 10) உப்பு 11) மரணம் 12) கிழமை 16) மசி 19) ஐவகை

**வலமிருந்து இடம்:**

4) யோக 7) அதிப 8) அருந்ததி 15) சனி 17) செங்கை 21) மருதம்

**மேலிருந்து கீழ்:**

1) சடகோபர் 2) தகை 3) சதி 5) கருவி 8) அதி 14) மங்கை

**கீழிருந்து மேல்:**

6) சரம் 10) உத்தியோகம் 13) குணம் 15) சகி 18) ராமராம 20) வகை 21) மனஅமைதி

**சரியான உற்றெழுத்தை அனுப்பிய அன்பர்கள் –**

சித்ரா, கல்பனா, சரூபா



Copyright © AMNA Trust, Chennai 

**2023 டிசம்பர் மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்**

ராஜமகேஷ்
உமாராணி
சுந்தரமூர்த்தி
பொன்லக்ஷ்மி
நாகமணி
பழனிகுமார்
மாதவன்
சபிதா
கிருத்திகா
வடிவேலன்
தனராஜன்
கல்யாணி
புன்னகை
செல்லம்மா
மஞ்சுநாதன்
முருகன்
இன்பலதா
தியாகராஜன்



மோகன் சித்ரா
கணேஷ்வரன்
அஜய் கிருஷ்ணன்
லலிதா
தேவ்ஆனந்த்
பொன்செல்வம்
பார்த்திபன்
சோலையப்பன்
அன்னபூரணி
வைஷ்ணவி
பாஸ்கர்
பழனி செல்வராஜ்
காளிராஜன்
கார்த்திகேயன். ஆவடி
ஜீவானந்தம். சிவகாசி
மகேஷ். மதுரை

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்ங ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 30 – Month: January 2024*